# தமிழ் பகுதிகளில் இன்றும் நாளையும் ஹர்த்தால்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 25 7-1985 வியாழக்கிழமை (ஆடி 10 ஜுலைகஸ்தூ 6) முழக்கம் 169

## சகல பஸ் சேவைகளும் ரத்து! பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்!!

தமிழ்ப் பகுதிகளில் இன்றும் நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1983 ஜுலை மாதத்தில் பலியான அப்பாவித் தமிழர்களையும், வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களையும் நினைவு கூரும் தினங்களாக இவ்விரு நாட்களும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றது. வடபிரதேச போக்குவரத்துச் சபை தன்று தனது பஸ்சேவைகளை நடத்த மாட்டாதென்று நேற்றே அறிவிக்கப்பட்டது "இன்றைய தினத்தைத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துகிறோம்" என்று தெரிவிக்கப்பட்ட சுவரொட்டிகளை தமிழீழ ராணுவம் நேற்று குடாநாடு எங்கும் ஒட்டியிருந்தது. பாடசாலைகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

★ பாவற்குளத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் செவ்வாய் இரவு

# 6 கட்டடம் குண்டினால் தகர்ப்பு; 3 விடுதிகளும் முற்றாக தீக்கிரை

## உலக வங்கி நிதி உதவியில் கட்டப்பட்டவை; 15 இலட்சம் ரூபா நஷ்டம் என மதிப்பீடு!

(வவுனியா)

வவுனியா தெற்கு, செட்டிகுளம் பகுதிகளை நிர்வகிக்கும் பாவற்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் திணைக்களக் கட்டடங்கள் நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. சில கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

உலக வங்கி வழங்கிய நிதி உதவியுடன் அண்மையில் கட்டப்பட்ட இக்கட்டடங்கள் இப்போது முற்றாகப் பாவிக்க முடியாத நிலைக்கு வந்துள்ளன.

ஆறு கட்டடங்கள் குண்டினால் தகர்ந்ததாகவும், மூன்று விடுதிகள், கராஜ், ஸ்டோரர் அறைகள் ஆகியன தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஏற்பட்ட மொத்த நஷ்டம் சுமார் பதினைந்து லட்சமாக இருக்கலாமென கூறப்படுகின்றது.

ஒருவார காலத்துக்கு முன்னர் இங்கு கடமையாற்றிய ஊழியர்கள் வேறு இடத்துக்கு

—6ம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் வடபகுதி விஜயம் செய்தாரா?

### தலைநகர் பத்திரிகைகளில் செய்தி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

...6ம் பக்கம் பார்க்க

### பஞ்சாப் பிரச்சினை தீர்வு உடன்படிக்கையில்

## ராஜீவ் லொங்கோவால் ஒப்பமிட்டனர்!

(புதுடில்லி)

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இந்திய அரசியலில் முக்கிய பிரச்சினையாக இருந்துவந்த பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அகாலிதள் கட்சியின் தலைவர் சார் ஹர்ஜன் சிங் லொங்கோவாலும் நேற்று மாலை கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி லோக்சபாவில் உறுப்பினர்களின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு மத்தியில் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார். இவ் உடன்படிக்கை பற்றிய சில தகவல்களும் நேற்று வெளியிடப்பட்டன.

இவ் உடன்படிக்கையின்படி முன்பு பஞ்சாப் மாநிலத்தில் இருந்து யூனியன் பிரதேசத்தில் சேர்க்கப்பட்ட ஹிந்தி பேசப்படும் பகுதி ஹரியானாவிற்கும், பஞ்சாபி பேசப்படும் பகுதி பஞ்சாப்பிற்கும் வழங்கப்படும்

.. 6 ஆம் பக்கம் பார்க்க

### நான்காவது வாகன கடத்தல்:

## ஆயர் இல்லத்திலிருந்து ஜீப் வண்டி கடத்தப்பட்டது!

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று நேற்று மாலை நான்கு மணியளவில் இனம் தெரியாதவர்களால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மை எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பாது, "பின்னர் அறிவிப்போம்" என்று தெரிவித்து

...6ஆம் பக்கம் பார்க்க

### லங்கா புவத் தெரிவிக்கிறது:

## காரைநகர் சூட்டு சம்பவம் திரித்துக் கூறப்பட்டதாம்!

கொழும்பிலுள்ள 'லண்டன் ரைம்ஸ்', ஏ. எஃப். பி. நிருபர்கள் காரைநகர் சம்பவம் தொடர்பாக வெளியிட்ட செய்திகள் திரித்துக் கூறப்பட்டவை என்று உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்ததாக லங்கா புவத் நேற்று அறிவித்தது!

மூன்று தமிழ் குடிமக்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக லண்டன் ரைம்ஸூம், துப்பாக்கி தாங்கிய சீருடையினர் பஸ்தரிப்பில் நின்றவர்கள்மீது துப்பாக்கிப்

...6ஆம் பக்கம் பார்க்க

### பாரத அமைச்சர் ஆலம்கான் அறிவிப்பு

## பூட்டான் மகாநாடு ஆகஸ்ட் 12-ல் திட்டமிட்டவாறு நடைபெறும்!

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இரு தரப்பினராலும் ஏற்கனவே உடன்பட்டுக்கொண்டபடி ஆகஸ்ட் மாதம் பன்னிரண்டாம் திகதியன்று தொடர்ந்தும் நடத்தப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

வெளியுறவு துணையமைச்சர் குர்ஷித் ஆலம்கான் லோகசபையில் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில், இம்மாத முற்பகுதியில் திம்புவில் இதன் முதல் சுற்று உரையாடல்கள் நடைபெற்றபோது மேலும் கலந்துரையாடல்களின் பொருட்டு மீண்டும் சந்திப்பதென இரு பகுதியினரும் தீர்மானித்தனர் என அவர் சொன்னார்.

எவ்வாறாயினும் இக்கட்டத்தில் இணைகப் பேச்சுவார்த்தைகளின் விபரங்களை வெளி

...6ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு படகு விபத்து

## அறுபது குடும்பங்களுக்கும் இலவச பங்கீட்டுப் பொருள்

நெடுந்தீவுப் படகு விபத்தில் மரணமானவர்கள், காயமடைந்தவர்களான அறுபது பேரின் குடும்பங்களுக்கும் மூன்று மாத காலத்துக்கு இலவச உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்படும்.

ஜுலை மாதம் 15ம் திகதி முதல் அக்டோபர் 15ம் திகதி வரைக்கும் இவை வழங்கப்படுமென அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அதே வேளை இச்சம்பவத்தில் மரணமானவர்களான முப்பத்தாறு பேரினதும் குடும்பத்துக்கு இறுதிச் சடங்குச்

—6ம் பக்கம் பார்க்க

## சூசைதாசன் நாடு திரும்பினார்

தமிழகம் சென்றிருந்த மன்னார் முன்னாள் எம். பி. திரு. சூசைதாசன் நேற்றுகொழும்பு திரும்பினார்,

## பொலிஸ் பயிற்சி தந்த பதற்றம்

வவுனியாவில் பொலிஸார் திடீரென கலகத் தடுப்புப் பயிற்சியொன்றினை நேற்று மாலை நகரில் மேற்கொண்டதால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

### எரிபொருள் விற்பனை

## பண்டத்தரிப்பில் நிறுத்தம்; பொதுமக்கள் கஷ்டத்தில்!

பண்டத்தரிப்பு எரிபொருள் விற்பனை நிலையம் கட்டுப்பாட்டு விலையில் எரிபொருளைச் சீராக விநியோகம் செய்து வந்ததாகவும், இங்கு விற்பனை நிறுத்தப்பட்டால் கள்ளச் சந்தையில் அதிக விலைகொடுத்து பொது மக்கள் வாங்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி, யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்,

மேற்படி நிலையத்தில் பெற்றோலை தொடர்ந்து விநியோ

.. 6 ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### ஏலவிற்பனை

2 சிலிண்டர் ஜன்மார் 30. H. P. மீன்பிடி இயந்திரம் 27-7-85 சனிக்கிழமை காலை 11 மணியளவில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விடப்படும்; இயந்திரத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் வந்து பார்வையிடலாம்: குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி. குருநகர், யாழ்ப்பாணம்;

# இஸ்ரேல் தேச மூளைசாலிகள் இங்கும் உருவாக வேண்டும்

(நவாலி)

இன்றைய நிலையில் நம் நாட்டு பிள்ளைகள் கல்வியைச் சிறந்த முறையில் கற்றுவரப் பாண், இஸ்ரேல் தேசத்தில் உள்ளவர்களைப் போன்று மூளைசாலிகளாய்த் திகழ்ந்து இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்று ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் அவர்கள் குறிப்பிட்டார்,

பாடசாலை அதிபர் திரு: அ: மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு: தனஞ்செயன் தொடர்ந்து உரையாற்றுகையில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதன் மூலம் மாணவர்களது திறமைகளையும் ஆற்றலையும் வெளிப்படுத்தி அவர்களை சிறந்த வீரர்களாக உருவாக்க முடியுமென்றும் கூறினார்: சேர, சோழ, பாண்டியன் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் சோழன் இல்லம் 249 புள்ளிகளையும் சேரன் இல்லம் 209 புள்ளிகளையும் பாண்டியன் இல்லம் 190 புள்ளிகளையும் பெற்றன.




❋ அளவெட்டிவடக்கு ஶ்ரீமன் ரசிகலா தம்பதிகளின் மகள் சுஜந்தா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ புளியங்கூடல் கந்தசாமி மகேஸ்வரி தம்பதிகளின் மகன் நவதாசன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்;

❋ சரவண மேற்கு தில்லை நடேசன் [illegible]கேஸ்வரி தம்பதிகளின் மகன் மயூரன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ மல்லாகம் பொன்னுத்துரை இலகவதி தம்பதிகளின் மகன் கிருஷ்ணகுமார் இன்று தனது பத்தாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

## வீர சபதங்கள்

கூடுகளுக்குச்
சொந்தம் கொண்டாடும்
வீரக்காக்கைகளே!
உங்கள் கூடுகளில்
அடைபட்டுக் கிடக்கின்ற
ஒன்றுமறியாக் குழந்தைகளை
குயில் குஞ்சுகளை
கட்டி வைத்து
கூட்டம் கூட்டமாய்
சூழ்ந்து வந்து
கொட்டிக்
கொலை செய்கின்றீரே!
மாண்ட குஞ்சுகளின்
மண்டைகளைப்
பிடுங்கி எறிகின்றீரே!
கண்களை
கொத்தித் தின்கின்றீரே!
வடிகின்ற
உதிரத்தை வார்த்து
சபதங்கள் செய்கின்றீரே!
நன்றாய் இருக்கிறது
உங்கள் வீரம்
காக்கைகளே!
இளங்குயிலின்
இனிய குரலுக்கு
உங்கள்
கடுங்குரல் நிகராமோ?
எங்கே?
உங்கள் குஞ்சுகளை
காட்டுங்களேன்

★ சிவஞானம் ஜெயசங்கர்

## சுந்தரர் பூஜை

வவுனியா சி. சி: ரீ. எம். பாடசாலை மாணவர் ஆதரவுடன் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இன்று வியாழக்கிழமை இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை நடாத்தவிருக்கின்றது. சங்கத் தலைவர் மு. பாலசுப்பிரமணியத்தின் தலைமை உரையுடன், திருமுறை ஓதல், பேச்சு, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன;

மாலை யோகாசனப் பயிற்சி வகுப்புக்களையும் சங்கம் ஆரம்பிக்கவிருக்கிறது. டாக்டர் சிவு பரராஜசிங்கம் விளக்கவுரை வழங்க, செய்முறைக் காட்சிகளை யோகாசனப் பயிற்சி ஆசிரியர் சண். சொக்கலிங்கம் செய்து காட்டுவார்.

# குருநகரின் குலதெய்வம் புனித யாகப்பர் திருநாள்



யாழ் நகரின் முத்தெனத் திகழும் திருநகராம் குருநகரின் குருகுல மக்களின் பாதுகாவலராம் புனித யாகப்பரின் திருநாள் இன்று இருபத்தைந்தாம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ் மன்னரின் தளகர்த்தர்களாகவும். பேரர் வீரர்களாகவும் பணிபுரிந்த குருநகர்க் குருகுல மக்கள் போர்த்துக்கீசரின் படையெடுப்பின் பின் தமது வாழ்க்கைத் தொழிலாக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டதுடன் மீன்பிடித் தொழிலையே தமது தொழிலாகக் கொண்டு யேசுவின் அழைப்பையேற்று தன்னையே — தனது தொழிலையே — தனது உற்றார் உறவினரையே தியாகம் செய்து இறைப்பணிக்காகப் புறப்பட்ட செபதேயுவினதும், மரிய சலோமையினதும் மகனை புனித யாகப்பரைத் தமது பாதுகாவலராகத் தெரிந்து கொண்டனர்.

வீரமும், துணிவும். தியாகமும் இறைப்பற்றும் கொண்ட தமது பாதுகாவலராம் புனித யாகப்பர் வழியிலே தாமும் வாழ்ந்து அவருக்கென யாழ் நகரின் மத்தியிலே தூபிமாடத்துடன் கூடிய அழகிய ஆலயம் அமைத்து நூற்றி இருபத்திநான்கு ஆண்டுகளாக விழா வெடுத்துச் சிறப்பித்து தமது தனித்துவத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர் இவர்கள்;

எதிரிகளை அழித்தும் அசுத்த அரூபிகளை வதைத்தும் வியாதிக்காரரைக் குணமாக்கியும் நம்பியிருப்பவர்களைப் பாதுகாத்தும் யேசுவின் உண்மையான சீடனாக இருந்து இறைப்பணிக்கே தன்னை அர்ப்பணித்துப் பல புதுமைகளைச் செய்தும் செய்து கொண்டும் தமது மக்களாகிய எம்மைப் பாதுகாத்து வரும் பாதுகாவலர் புனிதர் யாகப்பரின் ஆலயத்தின் நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டு விழா அடுத்த ஆண்டு மிகக் கோலாகலமாகக் கொண்டாடப் படவுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

## இன்று குரு பூஜை

(நவாலி)

ஆனைக்கோட்டை புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று பி. ப. 4,30 மணியளவில் ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூஜை நடைபெறவுள்ளது;

திருக்கேதீஸ்வரத்துக்கு

# நல்லூரிலிருந்து பஜனை பாத யாத்திரை நடைபெறும்

நல்லூரிலிருந்து திருக்கேதீச்சரத்திற்கான பஜனைப் பாத யாத்திரை சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் நல்லை ஆதீனத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இதனை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைத்து அருளாசி வழங்கி வழியனுப்பி வைப்பார்.

கதிர்காமம் தீர்த்தத் தினத்திற்கு முதல் தினம் இவர்கள் கேதீச்சரத்தைச் சென்றடைவார்கள், பாத யாத்திரைக்கு சைவப் பேரறிஞர் மு. ஞானப்பிரகாசம் தலைமை தாங்குவார்கள்;

நல்லூர்க் கந்தன் வழிபாட்டை முடித்துக்கொண்டு, பருத்தித்துறை வீதி, செம்மணி வீதி, மறவன்புலவு, கட்டாடி வயல், கிராஞ்சி, இலுப்பைக் கடவை, பொன்னு வெளி, பூநகரி ஊடாக பாதயாத்திரை திருக்கேதீச்சரத்தைச் சென்றடையும். தினந்தோறும் ஆலய வழிபாடு, புராண படனம் சொற்பொழிவு என்பன தங்குமிடம் மற்றும் ஆலயங்களில் இடம் பெறும்;

பாதயாத்திரையில் சேர்ந்து கொள்ள விரும்புவோர் நல்லை ஆதீனத்தில் சனிக்கிழமை பிற்பகல் 1·00 மணிக்கு சமுகந்தருமாறு வேண்டப்படுகின்றனர்;

வடமராட்சிப் பகுதியில்

# சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் வேலை விஸ்தரிக்கப்படுகிறது

(உடுப்பிட்டி, புலோலி நிருபர்கள்)

வடமராட்சிப் பகுதியில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் விஸ்தரிப்பு வேலைகள் அண்மையில் நடைபெற்றன. இப்படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இப்பகுதியில் பல இடங்களில் புதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனப்பத்திரங்களை வைபவ ரீதியாக வழங்கினார்,

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை றோ. க. த. க. பாடசாலை, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆகியவற்றில் இவ்வைபவங்கள் நடைபெற்றன,

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அவர் உரையாற்றுகையில், பின்தங்கிய கிராமங்கள் பலவற்றில் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பதால் அப்பகுதிகளில் சென், ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் முதலுதவி நிலையங்களைத் திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, தீவுப் பகுதிகளுக்கும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸின் சேவை பரவலாக்கப்பட்டுள்ளது. வருமுன் காக்கும் பழக்கம் எமக்கு அவசியம், ஆகவே நாம் அனைவரும் முதலுதவிப் பயிற்சி பெற்றிருத்தல் அவசியம் என்றார்.

இப்படைப் பிரிவின் வடமராட்சிப் பகுதி தொடர்பு உத்தியோகத்தர்கள் திரு ந. ஆனந்தராஜ்; திரு எஸ். அரியரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்,

## இளைஞர்களின்....

...4-ஆம் பக்கத் தொடர்

சிறிது எம் நினைவுத் திரைக்கு மீட்டெடுப்போம்;

தஞ்சாவூருக்கு அண்மையிலிருந்து நாம் பயணம் தொடங்கினோம். தீர்மானித்ததிலும்பார்க்க ஒரு நாள் சுணங்கி, ஏப்ரல் மாத இரண்டாம் வாரத்தில், ஒரு புதன்கிழமை இரவு, வள்ளம் புறப்பட்டது. அதிலிருந்த பன்னிரண்டு பேருக்கும் தலைமை தாங்கி வந்த பொபி, சுபாஷ் ஆகியோர் இருபது வயதைச் சற்றுத் தாண்டியவர்கள். இயந்திரக் கோளாறு காரணமாகவே பயணம் ஒருநாள் தாமதமாயிற்று. அதனால் விளையக் கூடிய ஆபத்து இல்லாமலே அக்கடற் பிரயாணத்திற் போதிய அபாயங்கள் நிரம்பியிருந்தன. ஒருசில நாட்களுக்கு முன்புதான் இலங்கைக் கடற்படை மூன்று இப்படியான வள்ளங்களைச் சமுத்திரத்தினுள் அமிழ்த்தியிருந்தது:

நாம் மேற்கொள்ளவிருந்த கடற்பயணம் எப்படிப்பட்டது? அதன் காலநேர எல்லைகள், தொலை தூரங்கள் என்னென்ன? நீர்மேலும், நிலமீதும் எத்தனை மைல்கள் செல்ல வேண்டும். கலங்கள், வாகனங்கள், கால்நடை முதலாயின எப்படியெப்படி இடம் வகிக்கும் சாத்தியக்கூறுகள் உண்டு? குறிப்பாக நேரிடக் கூடிய உயிராபாயங்கள் எத்தகையன? சகல இவ்விபரங்களையும் ஏலவே, செவ்வாயன்றே எனக்கு அறியத்தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஓரளவு தூரத்தில் நாங்கள் போய்ச்சேர்வதாக ஏற்பாடாகி இருந்தது. அந்த இடத்தினின்றும், கரையோர ஒதுக்கமாக ஆழமில்லாக்கடல் மீது சென்று யாழ்ப்பாணத்தை நாம் அடைவதாக இருந்தோம், ஆழ்கடலில் மாத்திரம் சஞ்சாரம் செய்யக்கூடிய கடற்படை பீரங்கிப் படகுகள் கடலோரமாகவுள்ள ஆழமற்ற நீரை அணுகமுடியாது, எனவே எம்மைத் தாக்கவும் அவர்களால இயலாதிருக்கும் என்பதற்காகவே இந்த முறையைக் கையாள்வதென நிர்ணயிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து வந்து சேர்ந்ததும், தேவையேற்படும் பட்சத்தில், காடுகள் வழியாக ஒருவேளை இருபது மைல் அளவில் கால்நடையாகப் போக வேண்டியும் ஏற்படலாம் என நான் அறிந்தேன். இலங்கைத் தீவின் தென்மேற்கிலுள்ள மன்னார்ப் பகுதியிலிருந்தோ, சில வேளைகளில் தென்கிழக்குப் பகுதியிலிருந்தோ நாம் யாழ்ப்பாணத்தை அடையக்கூடியதாக இருக்கும் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. எல்லாம் கடற்படைப் பீரங்கிப் படகுகள் எம்மை எவ்வாறு நடத்தப் போகின்றன என்பதைப் பொறுத்தது என்றார் பொபி. சிறிது கழித்து, அப்போது தான் அவ்வெண்ணம் அவரது மனதில் எழுந்தது போன்ற தோரணையில், சாவகாசமாக: "கடலை விடக் கானகம் பாதுகாப்பானது. ஆயினும், வனத்திற்கூட, துப்பாக்கிக் குண்டுகள் புதரினுள்ளிருந்து வரமாட்டாது எனக் கூற இயலாது. சில சமயம் இராணுவ வாகனங்கள் குழாமொன்றை நாம் எதிர்கொள்ள நேரிடலாம். அல்லது, அதனிலும் பார்க்க மோசமான, அவர்களது "அம்புஷ்" எனப்படும் மறைந்து காத்திருந்து வழிமறித்து நடத்தும் தாக்குதலும் சம்பவிக்க இடமுண்டு" என பொபி எச்சரித்தார்.

அதனைக் கூறி முடித்ததும் முடியாததுமாக, "கவலைப்படாதீர்கள்; உங்களை அங்கு பாதுகாப்பாக நாங்கள் கொண்டுபோய்ச்சேர்ப்போம்" எனத் தேறுதல் சொல்லி முடித்தார். (தொடரும்)

## நன்றி நவிலல்

சரசாலையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்லம்மா 22 7 85இல் "குககந்தகிரி" இல்லத்தில் காலமானார். அவர் கே. வி. மகாலிங்கம் (சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் வ. பி.போ. ச. கோண்டாவில்) ச. இரத்தினம் (மலர்) க. குகனேஸ்வரி ([illegible]வம்)யின் அன்புத் தாயாரும், இ, சபாரஞ்சிதன், செ. கந்தசாமி, ம. இராசேஸ்வரியின் அன்பு மாமியாரும், கி. சிவகுமார் (தொலைத்தொடர்பு நிலையம்), கஜேந்திரன், ஜீவராகவன், காண்டீபன், துஷியாந்தினி, முகுந்தமேனன், வதனி, ராஜன், லோஜினி, றூபன், றூபி, றூபன், றூபனு, தீபன், சீலன், சோபனு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். 23,7,85இல் நடைபெற்ற ஈமக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குககந்தகிரி,
28, கின்றுலைம்கண்டு லேன்,
அரியாலை.

—மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

சுன்னாகம் பிரஜைகள் குழு வேண்டுகோள்:

# தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலைய கோபல்ட் கருவியை மீண்டும் பொருத்துக

(அளவெட்டி)

தெல்லிப்பழையில் புதிதாகக் கட்டப்பட்ட, புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுப் பகுதியில் பொருத்தப்பட்ட கோபல்ட் புற்று நோய் சிகிச்சை இயந்திரம் சில மாதங்களுக்கு முன்னர் கழற்றி எடுக்கப்பட்டு, மகரகமவிலுள்ள புற்று நோய் சிகிச்சைப் பிரிவிலே அவ்வியந்திரம் பொருத்தப்பட்டுள்ளதையும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு புற்று நோய்ச் சிகிச்சை நிபுணர் ஒருவர் இல்லாமையாலேயே கோபல்ட் புற்று நோய் சிகிச்சை இயந்திரம் கழற்றி எடுக்கப்பட்டதென்றும் அரசாங்கம் கூறியதையும்-கண்டித்து சுன்னாகம் பிரஜைகள் குழு அறிக்கை ஒன்ற வெளியிட்டுள்ளது!

யாழ் பிரதேசப் பகுதியிலே புற்று நோயினால் பீடிக்கப்பட்டு, அவஸ்தைப்படும் பல்லாயிரக் கணக்கானோர் நன்மை கருதி, உடனடியாக தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு ஒரு புற்று நோய்ச் சிகிச்சை நிபுணரை நியமித்து, கோபல்ட் இயந்திரத்தையும் தந்து உதவுமாறும் சுன்னாகம், பிரஜைகள் குழுத் தலைவரும், முன்னாள் கல்விப் பணிப்பாளருமான திரு தி. மாணிக்கவாசகர், சுகாதார அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் அவசரத் தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பணிகள் துரிதம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் புதிய நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்தால் பணிமனையின் நிர்வாகமட்ட அலுவல்கள் துரிதமாக நடைபெறுகின்றன.

## குருக்களாக நால்வர் திருநிலை பெறும் சடங்கு

(மிருசுவில்)

அருள் சகோதரர்கள் மரிய செபஸ்தியன் (இளவாலை) யேசுதாசன் (சூராவத்தை), செபஸ்ரியன் (கல்கமுவ), ஜெரோ செல்வநாயகம் (கரம்பன்) ஆகியோர் எதிர்வரும் 6ம் திகதி யாழ் ஆயர் பேரருள் திரு. நயோகுப்பிள்ளை ஆண்டகையால் குருக்களாகத் திருநிலைபடுத்தப்படுவார்கள்.

தியக்கோன் நிலையிலிருந்து இவர்களை குருக்களாகத் திருநிலைபடுத்தும் சடங்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

## அபிவிருத்தி பணியில் மாதர் பங்களிப்பு அதிகரிக்கிறது

முள்ளியவளை கருத்தரங்கில் பேச்சு

(சரசாலை)

சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு இம்மாதம் மூன்றுவது கிழமையை மகளிர் வாரமாக தேசிய இளைஞர் மன்றம் பிரகடனப்படுத்தியது தொடர்பாக முள்ளியவளையில் மகளிர் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு இளைஞர் சேவையதிகாரி திரு.கே. உருத்திரகோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு சி மகாலிங்கம் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் அவரது உரையில்: அபிவிருத்திப் பணியில் பெண்களுடைய பங்கு அதிகரித்து வருகின்றது பெண்கள் எல்லா விடயங்களிலும் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும், பெண்களின் வாழ்க்கையை முன்னேற்ற மூடநம்பிக்கைகள், கல்வி அறிவின்மை என்பன போக்கப்பட வேண்டும். பெண்களின் பணி மகத்தானது என்பதனை வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது பெண்களை தெய்வமாக போற்றுபவர்களும் உண்டு எனவே இளம்பெண்கள் ஒன்றுபட்டு தமது நல்வாழ்விற்காக உழைக்க வேண்டும். இளம்பெண்கள் இப்படியான கருத்தரங்குகளில் பங்குபற்றுவதன் மூலம் நல்ல அறிவுள்ள விடயங்களை அறிய வாய்ப்புக்கிட்டும் நடைமுறையில் அறியவேண்டிய பல விடயங்களை அறிய சந்தர்ப்பமும் ஏற்படுகின்றன'' என்று கூறினார்.

செல்வி எஸ். சரஸ்வதி உட்பட பலரும் உரையாற்றினர்.

## மன்னார் மக்களின் துயர் துடைக்க இணைந்த சேவை

(மன்னார்)

''இருண்ட இக்காலகட்டத்தில் சகல மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், இளைஞர்களத் தலைவர்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து மன்னார் மக்களின் துயரைத் துடைப்பதற்கு முன்வந்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.''

இவ்வாறு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்ட வரவேற்புரையின்போது சங்க முக்கிய அமைப்பாளர்களில் ஒருவரான வண. பிதா சேவியர் குருஸ் அவர்கள் குறிப்பிட்டார்.

கடந்த இருபதாம் திகதி சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மன்னார் அரச அதிபர் ஜனாப் எம் எம். அப்துல்கசதர், மதகுருமார்களாகிய மௌலவி எம். இஸ்மாயில், பிரம்மஸ்ரீ ரி மனோகர சர்மா ஸ்ரீ தம்மஜோதி தேரோ, வணபிதா பிலிப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தலைவராக மன்னார் மாவட்ட குரு முதல்வர் வண.பிதா. சேவியர் குருஸ், செயலாளராக விவசாயப் போதனாசிரியர் சிங்கிலேயர் பீற்றரும், பொருளாளராக மன்னார் உதவி தபால் அதிகாரி ஜனாப் எம் எம். ஹனீபாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மக்கள் தவிப்பு

(சரசாலை)

எழுதுமட்டுவாள்- நாகர் கோவில் வீதி கடந்த சில வருடங்களாக திருத்தப்படவில்லை. இதனால் எழுதுமட்டுவாள், நாகர் கோவில், குடத்தனை, குடாரப்பு, மருதங்குளம், விழுபலை போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள் பிரயாணம் செய்ய முடியாது தவிக்கிறார்கள்.

## கண்ணியமான சேவையே மனித வாழ்வை மேம்படுத்தும்

(சுழிபுரம்)

''கடமை உணர்ச்சியும், கட்டுப்பாடான வாழ்வும், கண்ணியமான சேவையும் மனித வாழ்வை மேம்படுத்துகின்றன ஒரு ஆசானுக்கு இவை இன்றியமையாதவை. இத்தகைய குணநிசயங்கள் நிறைந்தவரே எமது காலஞ் சென்ற அதிபர் திரு. சிறீனிவாசன்.''

இவ்வாறு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. க அருணாசலம் கூறினார்.

அதிபர் திரு: அருளானந்தம் தலைமையில் முன்னைய அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் ஆரம்ப உரையுடன் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. சிறீனிவாசவின் படத்தை பாடசாலை முதல் மாணவர் திரு. து. இராசரத்தினம் திறந்து வைத்தார். அன்னாரின் நினைவுமலர் வெளியீட்டை பண்டிதர் அ. ஆறுமுகம் வெளியிட்டார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா உரையாற்றுகையில் ''கல்லூரியின் வளர்ச்சியில் அளப்பரும் தொண்டு புரிந்தவர், மாணவர்களுக்கு தண்டனை வழங்காமலே அவர்கள் புரியும் சிறு தவறுகளைத் திருத்துபவர் அமரர் சிறீனிவாசன்'' என்றார்.

முன்னாள் ஆசிரியர் திரு. இ அப்பாத்துரை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்; பண்டிதை திருமதி பொன். பாக்கியம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் திரு. கா. வேல்முருகன் ஆகியோரும் பேசினர். திரு க. வாமதேவன் நன்றி உரையாற்றினார்.

## நூல்நிலையங்களே ஏழைகள் பல்கலைக் கழகங்களாகும்

(உடுப்பிட்டி)

''ஏழைகளின் பல்கலைக் கழகங்கள் எனப்படும் நூல் நிலையங்களைச் சிறப்பாக இயக்குவதன் மூலம் அறிவொளி மிக்க சமுதாயம் ஒன்றை உருவாக்குவதில் அக்கழகங்களின் விரிவுரையாளர்களான நூலகர்கள் நற்பணி புரியவேண்டும். உடுப்பிட்டிப் பகுதியில் நூலகமில்லாத குறை இன்று நீங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும்!''

யாழ். அபிவிருத்திச் சபை உடுப்பிட்டி உப அலுவலகத்தினால் சுமார் ஒன்றேகால் இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட உடுப்பிட்டி பொதுசன நூலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய இவ் உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு: என். பேராசிரியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பேராசிரியன் மேலும் பேசுகையில், கிராமிய அபிவிருத்திக்கும் சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்கும் நூலகங்கள் இன்றியமையாதனவாகும். மக்களின் ஓய்வு நேரங்கள் வீணாக்கப்படாமல் பேணப்படுவதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன.

இப்படியான நூலகங்கள் திறந்து வைத்தால் மட்டும் போதாது, அவற்றின் குறை நிறைகளை அறிந்து முன்னேற்றுவதில் பொதுமக்களே முக்கிய கவனம் எடுக்க வேண்டும் என்றார்.

மங்கல விளக்கேற்றி வைத்து இவ்விழாவை ஆரம்பித்த பிரதம விருந்தினர் திரு வ. வேலாயுதமும் உரையாற்றினார். திரு எம். கணேசலிங்கம் நன்றி உரையாற்றினார்.

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இம்மாதம் 29ம்திகதி பிற்பகல் 4.30மணிக்கு நடைபெறவுள்ளது.


தரமான

போட்டோ ஸ்ரற் (PHOTO STAT)

தட்டச்சு எழுத்து (TYPING) பிரதிகளுக்கு

கிளீன் கட் (KLEEN KHUT)

239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர், குவைத், டுபாய், அபுதாபி

போன்ற நாடுகளுக்கு

வீட்டுப் பணிப்பெண்கள்,
வைத்தியசாலைத் தாதிமார்,
தொழிலாளர் போன்ற
பதவி பெற்றுச் செல்லும்
உங்கள் பிரயாண ஒழுங்குகளுக்கு
பாஸ்போர்ட், புகைப்படங்களுடன் உடன்
நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

துரித கதியில்

பாஸ்போர்ட், பொண்ட், விமான டிக்கட் வசதிகள்

ஒழுங்கு செய்வதற்கு

நம்பகமான ஸ்தாபனம்

ஷாஹி ஷிபா

ஆத்ம ஆரோக்கிய நிலையம்

125, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
(குருநகர் பழைய பொலிஸ் நிலையம் அருகாமையில்)

விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், இவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்
(ரெலிகோணர் கிளை)
159 மின்சார நிலைய வீதி
நவீன சந்தை
யாழ்ப்பாணம்


## 2வது ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு 4-9-1963



ஆள்பவன் பறிப்பு 25-7-1983

யாழ். அரியாலையூர்

திரு. அழகராசா ராஜன்

1983 ஆடிமாதம் 25ஆம் திகதி இனக்கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் அகால மரணமான எங்கள் அன்பு மகனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

நெடுங்குளம் றோட், அரியாலை. — தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரி

**உதய சிந்தனை**

*நித்தம் நித்தம் உழைப்பின்றி உண்பவர், தத்தம் வீட்டிலே திருடுபவர்.* — ஓர் அறிஞர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி: 23336

## இதய ஒலி

25 7-1985 வியாழக்கிழமை (குரோதன ஆடி 10)

# பூட்டான் மாநாடும் ஆகாச வாணமா?

தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் ஆரம்பமாகியிருக்கும் அசம்பாவிதங்கள் தொடர்பாக கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் சென்னையில் விடுத்திருக்கும் அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குரியது.

ஆயுதப் படைகளே மீண்டும் வன்செயல்களுக்குத் தூபமிடுவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொலிகண்டி, காரைநகர் சம்பவங்கள் ரோந்து நடவடிக்கை என்ற பெயரில் படை வீரர்களால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்றும், இவைகளைத் தடுக்காவிட்டால், இதனால் ஏற்படக்கூடிய முழுச் சம்பவங்களுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் திரு. அமிர்தலிங்கம் எச்சரித்துள்ளார்.

நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பாரதப் பிரதமர் எடுத்துவரும் நல்ல முயற்சிகளைச் சிதறடிக்கும் வகையில் இடம்பெறும் இச்சம்பவங்களை எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாது.

மூன்று வருடகாலம் பகைமை உணர்வுடன் வளர்ந்துவந்த பஞ்சாப் பிரச்சினைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

சீக்கியரின் முன்னணி எதிர்க்கட்சியான அகாலி தளின் தலைவர் லொங்கோவால், பிரதமர் ராஜீவை நேற்று முன்தினம் தனிமையில் சந்தித்துப் பேசியுள்ளார்.

பாரதத்தின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியை கொலை செய்த சீக்கியர்களின் அரசியல் கட்சியின் தலைவருடன் ராஜீவ் காந்தி மேற்கொண்ட பேச்சுவார்த்தை, உள்நாட்டுப் பிரச்சினையொன்றைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கையாகும்.

ராஜீவின் இந்த அரசியல் முயற்சியை அனைவருமே பாராட்டியுள்ளனர்.

பாரதத்தின் முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள் பகிரங்கமாக இதனைப் பாராட்டியுள்ளனர்.

பத்துக்கும் அதிகமான சீக்கியத் தலைவர்களும் இதனை வெகுவாக வரவேற்றுப் பேசியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை அமைச்சரவையை அவசரமாகக் கூட்டி தனது பேச்சுவார்த்தையின் பலாபலன்களை பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துக் கூறியுள்ளார்.

அதே மாலை, பாராளுமன்றத்தில் பேசும்போது, லொங்கோவாலுடனான பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை ராஜீவ் தெளிவுபடுத்தியுள்ளார்.

பிரதான உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கட்டுவதில் பாரதப் பிரதமர் ஆத்மார்தியாக எடுத்துவரும் முயற்சிகளை இது நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

தமிழர்களின் இனப்பிரச்சினையும் ஒரு உள்நாட்டுப் பிரச்சினையே தான். இதனைத் தீர்த்துவைக்க இலங்கை அரசு சரியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமையால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்ல நேர்ந்தது.

அகதிகள் பிரச்சினையினால் இந்தியா தனது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தது.

1983 ஜூலை 24 ஆம் திகதி பூதாகாரமாக வெடித்த இப்பிரச்சினை, நேற்றுடன் இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்டது.

கடைசியாக நடைபெற்ற பூட்டான் மாநாடாவது இதற்கொரு சுமுகமான தீர்வைக் கொண்டுவரும் என எதிர்பார்த்திருக்கும் வேளையில், மீண்டும் அரச படைகளே வன்செயல்களை ஆரம்பிப்பது, பாரதப் பிரதமரின் நல்ல முயற்சிகளைச் சீர்குலைப்பதாக அமைவதாக திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியிருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு அடிபணிந்து, பாரத அரசின் நன்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் இளைஞர் குழுக்களும் பதில் தாக்குதல்களை ஆரம்பித்தால், அதனால் எவ்வளவு பாரதூரமான விளைவுகள் ஏற்படக் கூடுமென்பதை ஆட்சியாளர்களால் உணர முடியாதா?

நடப்பவை அனைத்துக்கும் கண்களை மூடிக் கொண்டு, ''தீவிரவாதிகளே தாக்குகின்றனர்'' என்று கூறுவதால் பயனில்லை.

கண்களைத் திறந்து, நிதர்சனமாக என்ன நடைபெறுகின்றது என்பதைக் கண்டறிய அவர்கள் முன்வராத வரை, பூட்டான் மாநாடும் ஆகாசவாணமாகவே முடியும்!

யாழ். குடா நாட்டில் தங்கியிருந்துவிட்டு இந்தியாவிற்கு மீள்கையில் தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி முற்றிலும் எதிர்பாராதது என்கிறார் ''த.வீக்'' சஞ்சிகையின் நிருபர் பகவன் ஆர்.சிங். இக்கட்டுரைத் தொடரின் முதலிரு பகுதிகளும் இம்மாதம் 22ம் 23ம் திகதிகளில் வெளியாகின.

# இளைஞர்களின் திறமையான துப்பாக்கிப் பிரயோகமே எம்மைக் காப்பாற்றியது

## யாழ்ப்பாண யாத்திரை 3

முகம் நிறைந்த புன்னகையொன்றுடன் என்னை நோக்கிய சுபாஷ், 'இவ்வளவு மனம் கலங்குகின்றீர்களே; எங்களுக்கு இது சாதாரணமானதொன்று. எங்கள் சமரில் நூற்றுக்கணக்கானோரை நாங்கள் இழந்து விட்டோம். எனவே நாங்கள் இதனைக் கைவிடப்போவதில்லை' என என்னைத்தேற்றினர். அதன் பொருள், இன்னும் அநேகர் இறப்பர். வெகு விரைவில் ஒரு நாள் சுபாஷ் இறந்து விட்டதாக நீங்கள் கேள்விப்படுவீர்கள். அதனாலென்ன? எதுவுமே நேர்ந்துவிடவில்லை. முக்கியம் என்னவென்றால், தமிழ் ஈழம் இறக்கப்போவதில்லை. ஆனபடியால் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளுங்கள். பின்னர், செட்டியைப்பார்த்து: ''இந்த ஐயாவை கடலுக்கு அழைத்துப் போங்கள். அவர் நன்றாகத் தோய்ந்து கொள்ளட்டும். அவருடைய முகமெல்லாம் ஒரே பாடாகக் கண்டிப் போய்விட்டது. கடல் நீர் அதனை நன்கு கழுவித் துப்புரவாக்கும்.'' என்றார்.

எமது வள்ளத்தை நுணுகி ஆராய்ந்து பார்த்ததில், இருபத்துமூன்று துப்பாக்கிக் குண்டுகள் அதன் மீது பட்டிருந்தது கண்ணுக்குத் தெரிந்தது. ஆயினும் குறைந்த பட்சம் அதைப்போல நாலு மடங்கு, அதாவது நூறு, தரமாவது இலங்கைக் கடற்படையினர் எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருத்தல் வேண்டும். ஒரு குண்டு பெட்ரோல் பீப்பாவையும் துளைத்திருந்தது. அதிர்ஷ்டவசமாக அது ஒரு தீங்கும் விளைவிக்கவில்லை. மறுநாளுக்கு அணித்தாகவுள்ள கடல்மீது, இருபத்தேழு போராளிகளை இலங்கைக் கடற்படை கொன்றிருந்ததென அன்று காலைதான் அறிவிக்கப்பட்டது. நாங்கள் தாக்கப்பட்டதும் அங்கேயே. கொழும்பு அறிக்கையொன்று, குறைந்த மட்டில் இருநூறு மக்களாவது கைது செய்யப்பட்டிருந்தனர் எனவும் கூறிற்று. சமுத்திரத்தைக் கடக்க முயல்கையில், பாக்கு நீரிணையில் வைத்து அவர்கள் கைதாகினர் என்றது அறிக்கை. தப்பித்துச் செல்லும் வள்ளமொன்றை இலங்கைக் கடற்படையினர் காண நேர்ந்தால், வள்ளத்தில் உள்ளோர் ஆயுதம் தாங்கியோர் அல்லர், அகதிகள், என நன்றாகத் தீர்மானித்து, அதுவும் தமக்குப் பாதுகாப்பான தொலைவிலிருந்து தீர்மானித்துக்கொண்ட பின்னரேயே, அப்படையினர் அவ்வாட்களைக் கைதுசெய்வது உண்டு. ஆயுதங்கள் இருக்கின்றமைபற்றிய அற்ப சொற்ப ''அசுகை'' தென்பட்டு விட்டாற்போதும், அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கிவிடுவர்.

எங்கள் இரவு அனுபவம் பற்றி எவ்வளவுக் கெவ்வளவு நினைவுகூர்ந்து கொண்டேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு நாம் எப்படி உயிருடன் மீண்டோம் என வியப்பில் ஆழலானேன்.

நாங்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டைவிட்டுப் மீளத்தயாரானபோது சற்று நேரம் கடந்துவிட்டது. ஒருவாறு கடற்கரைக்கு வந்து, தோணி புறப்பட ஆயத்தமான வேளைதான் முகாமில் போராளிகளினது'' ''ஏ. கே. நாலேழு றைபிளை அவர்கள் மறதியாக விட்டுவிட்டு வந்துவிட்டமை அவர்களது நினைவுக்கு வந்தது. அது இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பயணம் தொடங்கட்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறினர். சுபாஷ் ''இரு மன'' நிலையில் சற்றுச் சபலமடைந்தார். அவர்களுடைய ''புத்திமதியை'' ஏற்பதா? அல்லது, முகாமுக்கு ஆள் அனுப்பி, அதனை எடுத்துவரச் செய்து, அதனையும் கைவசம் கொண்டு, கடற்பிரயாணத்தைத் தொடங்குவதா? ஏ. கே. நாலேழையும் எடுத்துக் கொண்டுதான் கடற் பிரயாணம் மேற்கொள்வது நல்லது என சுபாஷ் நிதானித்துக் கொண்டார்.

ஒரு சில மணித்தியாலங்களுள் அவருடைய நிதானம் எங்கள் உயிரைக் காப்பாற்றியது. இரு மீகாமன்களும் (சப்பலோட்டிகளும்) லாவகமாக எமது வள்ளத்தினைக் கையாண்டமையும், இளங்கோ, செட்டி, ஆகியோரின் திறன் வாய்ந்த துப்பாக்கிப் பிரயோகமும் சேர்ந்து நாம் உயிருடன் தப்பித்துக்கொள்ளத் துணை நின்றன. கூட்டு மொத்தமாக அன்றிரவின் எமது அனுபவங்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்தபோது, நாம் எவ்வளவோ பெரும் பாக்கியசாலிகள் என்பது எமது மனதில் உதயமாயிற்று. துர்ப்பாக்கியவசமாக, எங்கள் அதிட்டத்தில் மனோகரனுக்குப் பங்கு கிட்டவில்லை.

இந்தியாவிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு நான் வந்து சேர்ந்தேன். குடா நாட்டில் தங்கினேன். ஆனால் இந்தியாவுக்கு மீள்கையில் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி முற்றிலும் எதிர்பாராதது. வரும்போதும் தங்கியிருந்தபோதும் கிடைத்த எந்த அனுபவமேனும் இந்த அதிர்ச்சிக்கு என்னைத் தயாராக்கிவிடவில்லை. இந்தியாவை விட்டுக் குடாநாட்டிற்கு வரும்போதும் கடற்படைப் படகு ஒன்று எங்களை விரட்டியது மெய்யே. ஆனால் அது எம்மை அணுகவில்லை. தொலைவில் நின்றபடியே எமது படகின் திக்கில் குண்டுகளை ஏவியது. அவை எமக்குக் கிட்டத்தானும் வரவில்லை.

இனி, அப்பிரயாணத்தைச்

—2-ம் பக்கம் பார்க்க

உ

திருச்சிற்றம்பலம்

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த**

## கோளறு பதிகம்

(மூன்றாவது பாடல்)

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைதூர்தி சயமாது பூமி
திசை தெய்வம் ஆன பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

அழகு மிகுகின்ற பவளம் போலும் செம்மேனியில் ஒளி மிக்க திருவெண்ணீற்றை அணிந்து, மணங் கமழ்ந்து அலர்கின்ற கொன்றை மாலையையும், பிறையினையும், திருமுடியிற் சூடி வெண்ணிறம் வாய்ந்த எருதின் மேல் உமையம்மையாரோடும் அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தினால் இலக்குமியும், சரஸ்வதியும் கொற்றவையும் பூமாதேவியும் திசை காப்பாளர்களும் ஆகிய பல தெய்வங்களும் திருத்தொண்டர்களுக்கு அரிய நெறிகளில் நல்லன நல்லன, அவைகள் நல்லன நல்லன என்றவாறு.

ஒளி நீறு — அணிவோர்க்கு சிவஞான ஒளியைப் பயக்கும் நீறு என்னலுமாம்,

திசை காப்பாளர் — இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், என்பவராவர்

கோளறு பதிகத்தின் இம் மூன்றாவது திருப்பாட்டால் திருமகள் முதலிய தெய்வங்கள் அடியார்க்கு நன்மையாதல் கூறப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

# அணு உலை ஒத்துழைப்பு; அமெரிக்க - சீன ஒப்பந்தம் உருவாகியது!

(வாஷிங்டன்)

அமெரிக்காவும், சீனாவும் அணுசக்தி ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்றில் வாஷிங்டனில் வைத்துக் கைச்சாத்திட்டுள்ளன: இந்தவகையில் பத்து அணு உலைகளை ஏற்படுத்த சீனா இரண்டாயிரம் கோடி டாலர்களைச் செலவிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக சீன ஜனாதிபதி திரு: லீநியான் அமெரிக்க ஜனாதிபதியைச்சந்தித்து ஒப்பந்தத்துக்கானஏற்பாடுகளைச் செய்திருந்தார். இப்பேச்சுவார்த்தைகள் பதினான்கு மாதங்களாக நீடித்தன: சத்திரசிகிச்சைசெய்து கொண்டபின் ஜனாதிபதி திரு றெனால்ட் றீகன் மேற்கொண்ட முதல் தீர்மானம் இதுவென வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன: குறிப்பிட்ட பதினான்குமாதம் பேச்சுவார்த்தைகளின் பின் இத்தீர்மானத்திற்கு அவர் ஒப்புதல் அளித்திருந்தார்.

இது இவ்வாறு இருக்க, பாகிஸ்தானுக்கு பிரான்ஸ் அணு உலை வழங்குவது குறித்து பாரதம் கவலை வெளியிட்டுள்ளது.

இது சர்வதேச ரீதியிலான பாதுகாப்பு வரம்புக்குட்பட்டதா? என்ற வினா இக்கட்டத்தில் எழுந்துள்ளது.

எனினும் பாதுகாப்பு விதி மீறப்படாத வகையிலேயே பிரான்ஸ் இவ்விடயத்தில் செயற்படும் என்று பாரதப் பிரதம மந்திரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்:

பாகிஸ்தான் கூடுதல் ஆயுதங்கள் கொள்வனவு செய்து வருவது குறித்து அவர் குறிப்பிகையில் இதனால் பாரதத்திற்கும் தன்நிலையை வலுப்படுத்த பொருட் செலவு ஏற்படத்தான் செய்கிறது என்று சொன்னார்.

## நூறு கைதிகளை இஸ்ரேல் விடுவித்ததாக அறிவிப்பு!

(டெல் அவிவ்)

இஸ்ரேல் சிறைச்சாலைகளில் இருந்து நூறு ஹிஷியாக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

இச்சிறைச் சாலைகளில் இன்னமும் முந்நூறு கைதிகள் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

இக்கைதிகள் சகலரும் விடுதலை செய்யப்படவேண்டும் என சமீபத்தில் அமெரிக்க விமானத்தைக் கடத்தியவர்கள் நிபந்தனை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் முஸ்லிம் படைகள் நிலைகொண்டுள்ள பகுதிகள் மீது இஸ்ரேலியப் பீரங்கிப் படைகள் கடும் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் டெல்அவிவ் அறிக்கைகள் தகவல் தந்தன.

## செயற்பாடு

பங்களாதேஷில் சுலவரங்களையடுத்து மூடப்பட்டிருந்த பல்கலைக் கழகங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன,

பாரதப் பிரதம மந்திரி அறிவிப்பு

## எதிர்காலத்தில் அமெரிக்க ஆயுதக் கொள்வனவு இல்லை

(புதுடில்லி)

"எதிர்காலத்தில் அமெரிக்க யுத்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கில்லை" என்று பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

"தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வலிமையை பாரதம் பெற்றுள்ளது" என்றார் அவர்.

தனது அமெரிக்க விஜயம் குறித்துப், பிரஸ்தாபித்த அவர், அமெரிக்கா ஆயுதங்களைத்தர முன்வந்தது. ஆனால் அதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் ஓரளவு சந்தேகத்தைத் தோற்றுவித்தன. அமெரிக்காவில் உள்ள சீக்கியத் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் குறித்தும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு



வந்தேன். ஆயுதப்பயிற்சியைத் தடுப்பது என்பது தம் சட்ட வரம்புக்குள் இல்லை என்றார்கள். நிலைமைக்கேற்ப சட்டங்களை மாற்ற முடியும் என நான் அவரிடம் கூறினேன் என்றும் பிரதம மந்திரி கூறினார்.

சோவியத் யூனியன் பாரதத்திற்கு யுத்த ஆயுதங்களை வழங்கிவருகிறது. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கூடுதல் ஆயுதங்கள் வழங்கி வருவதாக பாரதம் அடிக்கடி குற்றஞ் சாட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## குஜராத் முதல்வர் எச்சரிக்கை

(குஜராத்)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டத்தை அமுல்செய்ய தான் தயங்கப்போவதில்லை என குஜராத் முதலமைச்சர் திரு. சௌத்திரி எச்சரித்துள்ளார்.

இங்கு வன்முறைகள் நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது,

உங்கள் முதலீட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டு அபிமானம் பெற்ற

தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினர் வழங்கும்

மேலும் ஒரு சலுகை!

இதுவரை மாதாந்த வட்டி பெறுவோருக்கு வழங்கி வந்த 25% வீதவட்டி

30% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

தமிழர் நிதியம் நிதி நிறுவனத்தினரின்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

25. 7. 85 வியாழக்கிழமை

# ஈழமுரசு

## முதல்வர் எம். ஜி. ஆர். நாளை ஜப்பான் பயணம்

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், அவரது மனைவி திருமதி. ஜானகி, மின்சார அமைச்சர் திரு. எம். இராமச்சந்திரன், போக்குவரத்து அமைச்சர் திரு. முத்துசாமி ஆகியோர் சகிதம் நாளை ஜப்பான் செல்வார் என நேற்று அறிவிக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள பூம்புகார் கப்பற் கம்பனி வாங்கியுள்ள கப்பல் ஜப்பானிலுள்ள மைசூரா என்ற இடத்தில் அடுத்தமாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றில் வைத்து முதல்வரிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### தனியார் பேருந்து சங்கம் அறிவிப்பு

# கட்டுப்பாட்டு விலைக்கு எரிபொருளைத் தந்தால் குறைந்த கட்டணத்தில் பஸ்களை ஓட்டத் தயார்!

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை தனியார் பஸ் சேவை குறித்து பருத்தித்துறை பிரஜைகள் குழு யாழ். அரசாங்க அதிபரின் கவனத்துக்கு மகஜர் மூலம் வேண்டியதை அடுத்து வடமராட்சி தனியார் பேருந்து இயக்குனர் சங்கம் இதற்குப் பதில் கடிதம் ஒன்றைப் பருத்தித்துறை பிரஜைகள் குழு தலைவருக்கும் அரசாங்க அதிபருக்கும் அனுப்பியுள்ளது.

கடந்த காலங்களில் ஒரு கலன் டீசல் 160 ரூபாவுக்கு வாங்கப்பட்டது. இ. போ. ச. சேவைகள் முற்றாக இயங்காத நேரத்தில் லாபத்தையும் பொருட்படுத்தாமல் பல கெடுபிடிகளுக்கு மத்தியில் சேவை யாற்றப்பட்டது. கள்ளச் சந்தையிலும் அதிக விலைக்கு எரிபொருள் வாங்கியும் சேவைகள் நடத்தப்பட்டன என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காலை 5 மணி முதல் காலை 7 மணி வரை பதினைந்து நிமிடத்துக்கு ஓர் சேவையும், காலை 7 மணி முதல் 10 மணி வரை பத்து நிமிடத்துக்கு ஒரு சேவையும், 10 மணி முதல் பிற்பகல் வரை சூழ்நிலைக்கு ஏற்றவாறு பதினைந்து நிமிடத்துக்கு ஒரு சேவையும் நடாத்தி வருவதாகவும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பருத்தித்துறை - யாழ்ப்பாண சேவைக்கு ஐந்து ரூபா அறவிடுவதாகவும், எந்த ஒரு ஸ்தாபனமோ தனி நபரோ அல்லது பிரஜைகள் குழுத் தலைவரோ கட்டுப்பாட்டு விலைக்கு எரிபொருள் தர முன்வந்தால் இ. போ. ச. அறவிடும் கட்டணத்திலும் பார்க்க இருபத்தைந்து சதம் குறைய அறவிடுவோம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

### த. ஆ. ச. செயலர் மகாசிவம் பேச்சு:

## சகல தமிழ் ஆசிரியருக்கும் எமது சங்கம் உதவி செய்யும்

(வண்ணார்பண்ணை)

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சங்க அங்கத்தினரின் குறைகளை நேரில் கண்டறிந்தார்.

வெளி மாவட்டங்களிலிருந்து கிளிநொச்சிக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள ஆசிரியர்களின் சம்பளப் பதிவு, சம்பள விபரம், சம்பளக் கொடுப்பனவுக் குறைபாடுகள் போன்ற விபரங்களை விரிவாக அவர் திரட்டினார்.

பல்வேறு வழிகளிலும் கஷ்டப்படுகின்ற தமிழ் ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்க சங்கம் இயன்றவரை முயற்சி செய்யுமென்றும், சங்க அங்கத்தவர்கள் அல்லாத ஆசிரியர்களது குறைகளையும் இன நலன் கருதி சங்கம் தீர்த்து வருகின்றது என்றும் திரு. மகாசிவம் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

### ஆயர் இல்....

-1ம் பக்கத் தொடர்

விட்டு, ஜீப்பைத் தாம் கொண்டுவந்த வாகனத்தில் அவர்கள் கட்டி இழுத்துச் சென்றார்களாம்.

யாழ்ப்பாணம் ஆயர் வணபிதா தியோகுப்பிள்ளை சம்பந்தப்பட்டவர்களை இனம் காட்டுமாறு கேட்டபோதும் கூட, அவர்கள் தம்மை யார் என்று தெரிவிக்க மறுத்து விட்டதாக ஆயர் இல்லப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகளுக்காக யாழ். கத்தோலிக்க துறவிகள் எவருக்கும் சற்றும் குறையாத வகையில் பணியாற்றி வருகின்ற போதிலும், இவ்வாறு அவர்களின் வாகனங்கள் கடத்தப்படுவதைக் கண்டித்து கத்தோலிக்க மக்கள் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்தில் கடத்தப்பட்ட நான்காவது வாகனம் இது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### காரைநகர்....

-1ம் பக்கத் தொடர்

பிரயோகம் செய்தபோது இருவர் கொல்லப்பட்டும் மற்றும் இருவர் காயமடையவும் நேர்ந்ததாகவும், துப்பாக்கி நபர்கள் கடற்படை சீருடையில் இருந்ததாகவும் ஏ.எஃப்.பியும் தெரிவித்திருந்தன.

வேண்டுமென்றே கடற்படையினர் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவெளி நாடுகளில் காட்டுவதற்காகவே இச் செய்தி நிறுவனங்கள் காரைநகர் சம்பவத்தைத் திரித்துக் கூறியதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்ததாக லங்கா புவத் தெரிவித்தது.

### அறுபது குடும்....

செலவாக தலா இரண்டாயிரத்து ஐநூறு ரூபா செக் திங்கட்கிழமை கச்சேரியில் வைத்து வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பூட்டான்....

-1ம் பக்கத் தொடர்

பிட முடியாதென அவர் மறுத்தார்.

பிரதம மந்திரியின் பாராளுமன்றச் செயலர் திரு. ஒங்கா பேர்னுண்டஸ் தமது விடையின் ஆரம்பத்தில், இலங்கை அரசின் சட்ட நிபுணர் குழுவுக்கும், இந்திய அட்டோர்னி ஜெனரலுக்கும் இடையில் சென்ற மாதம் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைத் தீவின் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில், குறித்த சில விடயங்கள் இடம்பெற்றதென சபையில் தெரிவித்தார்.

### பஞ்சாப் ...

-1ம் பக்கத் தொடர்

பஞ்சாப்பிற்கும், ஹரியானாவிற்கும் பொதுவான தலைநகராக இருந்த சண்டிகட் பஞ்சாப்பிற்கு மட்டுமே உரிமையுடையதாகும். சண்டிகட்டிற்குப் பதிலாக ஹரியானாவிற்கு வழங்கப்பட வேண்டிய பஞ்சாப்பின் ஹிந்தி பேசப்படும் பகுதி பற்றி ஆலோசிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். இக்குழு விசாரணைகளை மேற்கொண்டு டிசம்பருக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

சுக்கிலேஏரி முழுமையாகப் பஞ்சாப்பிற்கு வழங்கப்படும்.

பஞ்சாப்பிற்கான இராணுவப் படை விசேஷ அதிகாரங்கள் சட்டம் குறித்த அறிவிப்பு விலக்கிக் கொள்ளப்படும். பேரர் தொடுப்பது, விமானக் கடத்தல் போன்ற குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை மட்டும் இப்போதுள்ள விசேஷ நீதிமன்றங்கள் விசாரிக்கும். மற்ற வழக்குகள் சாதாரண விசாரணை மன்றங்களிற்கு மாற்றப்படும்.

இந்தியப் பிரதமருடனான பேச்சுவார்த்தைகள் பற்றியும், அதன் மூலம் எட்டப்பட்டுள்ள முடிவுகள் குறித்தும் அகாலி தலைவர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர்.

### பிரபாகரன்....

-1ம் பக்கத் தொடர்

திரு. பிரபாகரன் நேரடியாக சமூகம் கொடுத்து விடுத்த உத்தரவுகளின் பேரிலேயே பொலிகண்டி தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக இச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றைய கொழும்பு பதிப்புகளில் முதற் பக்கத்தில் இச்செய்தி வெளியாகியிருந்தது.

ஆனாலும் இந்தச் செய்தியை உத்தியோகபூர்வமாக எவரும் வர்ஜிதம் செய்யவில்லை.

### 6 கட்டடம்....

மாற்றப்பட்டதையடுத்து இக் கட்டடங்கள் பூட்டப்பட்டுக் கிடந்தன. இதனால் இக்கட்டடத்தில் வேறு பிரிவினர் குடியேறலாமென்று பேச்சடிபட்டது.

இங்கிருந்த புல்டோசரும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

### பண்டத்தரிப்பில்....

இக்க நடவடிக்கை எடுக்குமாறும், இல்லாவிடின் பொது மக்களே பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளரையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இப்பகுதி விவசாயிகள், வாகனக்காரர்கள் எரிபொருள் பெற முடியாது படும் அவலத்தையும் டாக்டர் சுகந்தன் தமது கடிதங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

### ஆண்டுவிழாவும் திருவிழாவும்

(நல்லூர்)

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தின் 157வது ஆண்டு நிறைவு விழாவையும், பரிசுத்த யாக்கோப்பின் திருநாளையும் மொட்டிய நான்கு நாட்களுக்கான எழுப்புதல் கூட்டங்கள் இன்று வியாழக்கிழமை மாலை நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் ஆரம்பமாகின்றன.

இக்கூட்டங்களில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையின் சேகரக்குரு அருட்திரு. எஸ். எஸ். கருணராஜ அடிகளார் அருளுரை நிகழ்த்துவார்.

27-ந் திகதி சனிக்கிழமை காலை வாலிபர்களுக்கான கூட்டமும், மாலை தாய்மார்களுக்கான கூட்டமும் நடைபெறும். 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பரிசுத்த யாக்கோபின் திருநாள் உற்சவ ஆராதனை ஒப்புக் கொடுக்கப்படும். இவ் வாராதனையில் திருநற்கருணையும், பிரசங்கமும் இடம் பெறும். உற்சவ ஆராதனையின் பின்னர் ஐக்கிய போசனம் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### திருமதி. ஞானசௌந்தரி தம்பித்துரை (இராசாத்தி)

திருமதி. ஞானசௌந்தரி (இராசாத்தி) அவர்கள் மறுமை எய்தினார். அன்னார் தம்பித்துரையின் அன்பு மனைவியும், சரோஜினி, விஜயராஜ், லோகினி, ஞான சிவோஜினி, வசந்தினி, அற்புதராஜ். ஜீவராஜ், ஆகியோரின் அன்புத்தாயாரும், சேமநாதன், சாந்தா. இரத்தினராஜா, வில்சன், ஜனேந்திரன், தேவராணி, ஜெயா, ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் பிரேதசம ஆராதனை அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.

தகவல்: த. இரத்தினராசா.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை

திருமதி சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை காலமாகிவிட்டார். இவர் திரு. T. N. அப்பாத்துரை (ஓய்வுபெற்ற தபால் அதிபர்-மலேசியா)யின் அன்பு மனைவியும், திருமதி சீதாதேவி வைத்திலிங்கம், மகேஸ்வரன் (இயக்குநர் பொதுச் சுற்றாடல் பகுதி மலேசியா) சர்வானந்தன் (விரிவுரையாளர் நைஜீரியா) மகாதேவன் (கணக்காளர் சாம்பியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நீதியரசர் வைத்திலிங்கம், சரோஜாதேவி, ரேவினி குணலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-7-85 அன்று சீதா இல்லம் மல்லாகத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் அமைந்திருக்கும் ஆனந்த ஆச்சிரமத்தின் நிர்வாகியான

### திரு. முத்துக்குமாரு மயில்வாகன சுவாமி

அவர்கள் 24-7-85 புதன்கிழமை காலை இறைவனடி எய்திவிட்டார். அவர்களின் தகனக் கிரிகைகள் 25-7-85 வியாழன் மாலை 4 மணி அளவில் தொண்டைமானாறில் நடைபெறும்.

இவ்வண்ணம்

ஆச்சிரம அன்பர்கள்

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25-07-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336